ශ්‍රී ලංකා පරිපාලන සේවා සංගමය
ஸ்ரீ லங்கா நிருவாக சேவைச் சங்கம்
SRI LANKA ADMINISTRATIVE SERVICE ASSOCIATION

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My Ref. | SASA/2022/A/53 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your Ref. | | දිනය<br>திகதி<br>Date | 08.07.2022 |

அதிமேதகு ஜனாதிபதி,
ஜனாதிபதி மாளிகை,
கொழும்பு 01.

மாண்பு மிகு பிரதமர்,
பிரதமர் அலுவலகம், சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை,
கொழும்பு 07.

**தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியினை முடிவுறுத்த தேவையான தீவிரமான தலையீட்டின் அவசியத்தை வலியுறுத்துதல்**

இந்நாட்டின் அரச சேவையை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னணி அமைப்பான இலங்கை நிர்வாக சேவை சங்கத்தினராகிய நாம் உங்களிடம் இவ்வாறான வேண்டுகோளை விடுக்க நேர்ந்தமை குறித்து நாங்கள் மிகவும் வருத்தமடைகிறோம்.

இலங்கையின் முன்னோருபோதுமில்லாத பொருளாதார, சமூக மற்றும் அரசியல் வீழ்ச்சிக்கு அரசியல் தலைமையே முதன்மையான பொறுப்பு என்று நாங்கள் நம்புகிறோம். அரச சேவை மற்றும் சிவில் சமூகத்தின் பொறுப்பு இதில் குறைவாகவே உள்ளது. எவ்வாறாயினும், "அரசைக் கட்டுப்படுத்தி அதில் பங்குபற்றிய அரசியல்வாதிகளே இதற்கு பிரதான காரணம்" என்ற சமூகக் கருத்துடன் எமது கருத்தும் ஒன்றாக உள்ளதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தனது அரசியல் அதிகாரத்தை பலப்படுத்த;

- அரசியலமைப்பை தவறாகப் பயன்படுத்துதல்.
- சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளிக்காமல் இருத்தல்.
- சீரான தேசிய கொள்கைகள் இல்லாமல் நாட்டை இயக்குதல்.
- அரசின் வருவாய் மற்றும் செலவினங்களை முறையாக நிர்வாகம் செய்தல்.

- வளர்ச்சி முன்னுரிமைகளை அடையாளம் காணாமல் மூலதனச் செலவினங்களைச் செய்தல்.

- நல்லாட்சியின் கொள்கைகளுக்கு எதிராகச் செயல்படுதல்.

- தமது ஆதரவாளர்களை ஊழல் மற்றும் மோசடியில் ஈடுபட வசதி செய்தல்.

- பொது சேவையை அரசியலாக்குவது மற்றும் சுதந்திரமான பொது சேவையை பேணுவதற்கு தேவையான பின்னணியை உருவாக்காமல் இருப்பது.

- அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் அரசு மற்றும் அரசுசார் நிறுவனங்களில் பதவிகளுக்கு அதிகாரிகளை நியமித்தல்

- நடைமுறை அனுபவங்கள் உள்ள அறிவார்ந்தவர்களை பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்வதற்கான நியாயமான வாய்ப்புகள் அற்ற செலவுகூடிய தேர்தல் முறையை அமல்படுத்துதல்.

- பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளின் பராமரிப்புக்காக பாரிய செலவினங்களைச் செய்தல்.

- உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்காமல் சேவைத் துறைகளை நோக்கி அதிக முனைப்புடன் செயல்படுதல்.

நாட்டை அதளபாதாளத்திற்கு இட்டுச் சென்ற அடிப்படைக் காரணிகள் இவைகள் தான் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்நிலைமைக்கு எதிராக, பலமான மக்கள் கருத்து உருவாகியுள்ள சூழலிலும், தற்போது ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் உங்கள் இருவர் தலைமையிலான அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற நடவடிக்கைகளும், அதிகாரத்தைப் பெற்று, பலப்படுத்திக்கொள்ள சில அரசியல்வாதிகளின் கேவலமான செயற்பாடுகளும், பாராளுமன்றத்தின் மதிப்பையும் நம்பிக்கையையும் மொத்தமாக வீழ்ச்சியடையச் செய்தது என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இந்த இக்கட்டான தருணத்தில், சில அரசியல்வாதிகள் பொதுச் சொத்துக்களை தங்களின் சொந்த சுகத்திற்காக தவறாகப் பயன்படுத்தியும், மோசடி மற்றும் ஊழல் பரிவர்த்தனைகளில் ஈடுபட்டும், ஊழல் அதிகாரிகளை உயர் பதவிகளில் நியமித்தும், துரதிர்ஷ்டவசமான சூழ்நிலையை மேலும் தீவிரப்படுத்துகின்றனர்.மேலும், அரச இயந்திரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக எங்கள் தொழிற்சங்கம் முன்வைத்த குறுகிய கால பிரேரணையில் உள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் உங்கள் தலைமையிலான அனைத்து அரசியல் கட்சிகளும் பாரம்பரிய முறைகளில் நாட்டை வழிநடத்தி வருகின்றமையும் வருத்தமளிக்கிறது.ஒரு நிலையான தேசிய கொள்கை கட்டமைப்பைப் பேணுவதற்கு ஒரு கொள்கைக் குழுவை நிறுவுதல், பாராளுமன்றத்திற்கும் நிர்வாகத்திற்கும் இடையில் அதிகார சமநிலையை நிறுவுதல், பொதுச் சேவையின் சுதந்திரம் மற்றும் 11 முக்கிய அம்சங்களின் மூலம் பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தத்தின் நேர்மறையான கூறுகளை உள்ளடக்கி அரசியலமைப்பு திருத்தத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை, கருத்திலெடுக்காது விட்டமை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

23 සී, සමුළු නිවාස, කැප්පෙටිපොල මාවත, කොළඹ 05.  23 சீ, சமிட் தொடர்மாடி,கெப்பிட்டிப்பொல மாவத்தை, கொழும்பு-05.
23C, Summit Flats, Keppetipola Mw., Colombo 05.

දුරකතනය/ தொலைபேசி/Telephone : 011 5766855  ෆැක්ස්/தொலைநகல்/විද්‍යුත් තැපැල/  Fax : 011 2058027
மின்னஞ்சல்/ Email : sasa.execo@gmail.com  වෙබ් අඩවිය/இணையத்தளம்/ Web: www.sasa.lk

தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற சூழல் வரும் வரை குறுகிய காலத்திற்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு எமது சங்கம் உட்பட அறிஞர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் முன்வைத்த முன்மொழிவுகளை புறக்கணித்ததன் விளைவுதான் இந்நாட்டில் இன்றைய அராஜக நிலை உருவாக காரணமாக இருக்கின்றது. அத்துடன், அரசாங்கம் ஸ்திரமாக இல்லாததாலும், பொதுவான உடன்படிக்கையில் செயற்படாததாலும், சர்வதேச சமூகத்தின் கௌரவமான அங்கீகாரத்தைப் பெறத் தவறியதாலும் சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் மட்ட உடன்படிக்கையை எட்டுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்படுகிறது. அதற்கேற்ப, தொடர்ந்து உருவாகும் பொருளாதார நெருக்கடி, அரச சேவையை முற்றாக முடக்கிவிடும் என்பதை அரசியல் தலைமைகள் உடனடியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இதன்படி, இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடிகளை இல்லாதொழிக்கும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசாங்கம் மற்றும் நிரந்தர அமைப்புடன் சுதந்திரமான அரச சேவையை உருவாக்கி, அரச இயந்திரத்தை வழிநடத்தும் வேலைத்திட்டத்திற்கு மாத்திரமே இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் ஆதரவளிக்கும் என இதன் மூலம் அறிவிக்கின்றோம்.

இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் நிறைவேற்று குழுவின் சார்பாக

திரு. பதுல ஸ்ரீ ரோஹன டீ சில்வா
தலைவர்

திரு. பிரதீப் லக்ஸ்சாந்த
செயலாளர்

பிரதிகள்;

1. மாண்புமிகு சபாநாயகர்
2. மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர்
3. அனைத்து அமைச்சர்கள்
4. அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள்
5. அனைத்து ஊடக நிறுவனங்களின் தலைவர்கள்
6. அனைத்து தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகள்.

23 සී, සමුළු නිවාස, කැප්පෙටිපොල මාවත, කොළඹ 05. 23 சீ, சமிட் தொடர்மாடி,கெப்பிட்டிப்பொல மாவத்தை, கொழும்பு-05.
23C, Summit Flats, Keppetipola Mw., Colombo 05.
දුරකතනය/ தொலைபேசி/Telephone : 011 5766855 ෆැක්ස්/தொலைநகல்/ Fax : 011 2058027
විද්‍යුත් තැපැල/மின்னஞ்சல்/ Email : sasa.execo@gmail.com වෙබ් අඩවිය/இணையத்தளம்/ Web: www.sasa.lk